<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 05/2009

2024-ம் ஆண்டு ஜீன் மாதம் 18-ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 18.06.2024

பிசா1 (பூபதி)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் 3 அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. முதல் அயிட்டம் 1.80 ஏக்கர் காலியிடம் என்றால் சரி. 2 வது அயிட்டம் 14 சென்ட் சிமெண்ட் சீட் போட்ட குடோன் என்றால் ஆமாம், அதை முதலிலேயே கிருஷ்ணசாமி என்பவருக்கு விற்று விட்டோம். 3 ம் அயிட்டம் 2930 சதுரடி இடத்திலுள்ள தார்சு வீடு என்றால் சரி.வாதியுடன் விற்கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய பின் ஒரு கால நீட்டிப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. 04.01.1999 ம தேதி ஒரு கால நீட்டிப்பு பத்திரம் வாதியுடன் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் 1/7 பாகம் பாத்தியமாகும். விற்கிரய உடன்படிக்கையில் மொத்த சொத்திற்கும் எழுதி கொடுத்தேனா என்ாறல் இல்லை 1/7 பாகத்திற்கு தான் எழுதி கொடுத்தேன். நான் விற்கிரய ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதி கொடுத்தேன் என்றால் 1998 ம் ஆண்டு, 09.07.1998 என்றால் சரி. இந்த வழக்கில் 3,4 பிரதிவாதிகளுக்கு விற்ற 40 சென்ட் சொத்து முதல் அயிட்ட சொர்தின் ஒரு பாகம் என்றால் நான் விற்கவில்லை, கடனிற்காக தான் பவர் கொடுத்தேன். ஆனால் அந்தபவர் பத்திரத்தில் செக்குபந்தி போட்டு அந்த சொத்து எழுதப்பட்டுள்ளது என்றும்,

அது முதல் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி என்றால் ஆமாம். மேற்படி பவர் பத்திரம் 17.08.1998 ல் நானும் என் தகப்பனாரும், என் சகோதரர்களும் சேர்ந்து 2 ம் பிரதிவாதிகக்கு எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரி. தாவா சொத்தை கிரயம் பெற்ற 3,4 பிரதிவாதிகள் கலைமகள் போர்வேல் என்ற பெயரில் போர்வெல் கம்பெனி வைத்துள்ளார்கள் என்றால் சரி. தாவா சொத்து 3,4 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற பின் சிறிது காலம் காலி இடமாக இருந்தது என்றால் சரி. அதில் அவர்களுக்கு சொந்தமான போர்வெல் வண்டி மற்றும் பொருட்கள் போட்டுவைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. பின்னிட்டு 3 ம்பிரதிவாதி அவரின் பாதி பங்கை 4 ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் ஆமாம், ஆனால் அது போலி கிரயமாகும். தாவா சொத்து குன்னத்துர் ரோட்டிலிருந்து தென்புறமாக 1000 அடி துரத்தில் உள்ளது என்றால் சரியல்ல, ரோட்டை ஒட்டி தான் உள்ளது. ரோட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 100 அடி தூரத்தில் இருக்கும் குன்னத்தூர் ரோட்டிலிருந்து தெற்கே சென்று கிழக்கே திரும்பி மீண்டும் தெற்கு நோக்கி செல்லும் 20 அடி தடம் தாவா சொத்திற்காக விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தெற்கிலிருந்து கிழக்கு நோக்கி எங்கள் சொத்தை நோக்கி அந்த பாதை முடிவடைகிறது, மீண்டும் தெற்கு நோக்கி திரும்பவில்லை. மேற்படி 20 அ டி தடம் குறிப்பிட்டு தான் பொது அதிகார பத்திரமும் அதை தொடர்ந்து கிரய பத்திரங்களும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர்களாகவே எழுதியுள்ளார்கள். நாங்கள் எழுதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரத்தில் 20 அடி தடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் 4 ம் பிரதிவாதி உரிய அனுமதி பெற்று 2011 ல் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, அதற்கு முன்னால் 2002 ம் ஆண்டே நாங்கள் கட்டிடம் கட்டி போர்வேல் போட்டு வைத்திருந்தோம். 2002 ம் ஆண்டு தாவா சொத்தில் கட்டிம் இருந்தது போர்வெல் போட்டிருந்தோம் என்ற விவரத்தை வழக்குரையிலோ எனது முதல் விசாரணை பிரமாண

வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அ வ எண் 06/2009 ல் 01.06.2004 ம் தேதி வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் ஆமாம். ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் அ வ எண் 06/2009 வழக்கின் தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரி. 2002 ம் ஆண்டே நாங்கள் கட்டிடம் கட்டி போர்வேல் போட்டு வைத்திருந்தோம் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல, ஆணையர் பார்க்கும்போதும் அதில் போர்வெல் மற்றும் கட்டிடம் இருந்தது.26.04.2011 ம் தேதி 4 ம் பிரதிவாதி ரூ.1,75,598 செலுத்தி காலி இட வரி செலுத்தி பெருந்துறை பேரூராட்சியில் முறையான அனுமதி பெற்று அவர் வாங்கிய சொத்தில் 6 கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த கட்டிடங்களுக்கு 6 மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்தை இந்தியன் ஓவர்சிஸ் வங்கி மற்றும் கரூர் வைஸ்யா வங்கியில் 2011 ல் அடமானம் வைத்து கடன் பெற்று கட்டிடம் பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கட்டிடங்களுக்கு பெறப்பட்டுள்ள காவேரி குடிநீர் இணைப்பு மேலே சொன்ன 20 அடி தடம் வழியாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த 20 அடி தடம் வழியாக தான் பாதாள சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கும் 4 ம் பிரதிவாதி வரி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வீடு கட்டும் போதே மின் இணைப்பு பெற்று விட்டார் என்றும், கடந்த 13 ஆண்டுகளாக சொத்து வரியும் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது என் சகோதரி கோமதி பாகப்பிரிவினை கோரியும், 3,4 பிரதிவாதிகளின் கிரய பத்திரம் செல்லாது என்றும் இதே நீதிமன்றத்தில் அவ எண் 22/2011 என்ற வழக்கையும், என் சகோதரர் கார்த்திகேயனின் மகன்களான பவானி சங்கர் , ராஜிவ் என்பவர்கள் அதே பரிகாரம் கோரி இதே நீதிமன்றத்தில் அவ எண் 40/2011 என்ற வழக்கையும், என் சகோதரர் சண்முக சுந்தரதின் மகன் மற்றும் மகள் திருமகள் ஜோதி

மற்றும் பூர்ண சந்திரன் ஆகியோர்கள் இதே பரிகாரம் கோரி இதே நீதிமன்றத்தில் அவ எண் 45/2011 என்ற வழக்கையும், எனது மனைவி சுகுணாதேவி, மகள்கள் பரமேஸ்வரி, தரணிகேஸ்வரி ஆகியோர்கள் அவ எண் 44/2011 என்ற வழக்கையும் தொடர்ந்தனர் என்றால் சரி. மேற்படி வழக்குகள் அனைத்தும் 03.12.2015 தேதியில் தள்ளுபடியாகிவிட்டது என்றால் ஆமாம், அவர்கள் அந்த வழக்கை நடத்தாததால் தள்ளுபடி ஆகியது. என் மனைவி மற்றும் குழந்தைகள் தாக்கல் செய்த வழக்கு நானும் அவர்களும் தனித்தனியாக பிரிந்திருப்பதாக சொல்லி தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் ஆமாம். இந்த 4 வழக்குகளும் என் தூண்டுதல் பேரில் போடப்பட்டது என்றால் சரியல்ல. என் சகோதரர் சண்முக சுந்தரம் என்பவர் தான் கடன் வர்ங்கியிருந்ததாகவும் அதற்காக தான் தாவா சொத்து பொறுத்து பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தாகவும் வாதாடியிருந்தேன் என்றால் சரி. இந்த வழக்கில் பதிலுரை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் தான். சண்முக சுந்தரம் தான் வரவு செலவு செய்து வந்தார் என்றும், அதனால் அந்த விவரங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அவரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரி. சாட்சி மீண்டும் எனக்கு நேரடியாக தெரியும் என்று கூறினார். குடும்பத்தின் வரவு செலவுகளை யார் பார்த்து வந்தார் என்றால் அப்பா தான் பார்த்து வந்தார். என் சகோதரர் சண்முக் சுந்தரம் கடன் வாங்கிய விபரம் என் அப்பாவிற்கு தெரியுமா என்றால் தெரியும். நானும் என் சகோதரர்களும் என் தகப்பனாரரும் சேர்ந்து தாவா சொத்தை விற்பதற்காக தான் 2 ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றும், அதன் அடிப்படையில் தான் 2 ம் பிரதிவாதி தாவா சொத்தை 3,4 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்தார் என்றும், பின்னிட்டு 3 ம் பிரதிவாதி அவரின் பாதி பாகத்தை 4 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றும் கிரயம் பெற்ற தேதி முதல் 3,4 பிரதிவாதிகள் சொத்தின் சுவாதீனத்தை பெற்றுக் கொண்டனர் என்றும், பின்னிட்டு 4 ம் பிரதிவாதி அவர் கிரயம்

பெற்ற  சொத்தில் கட்டிடம் கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றும், அதை மறைத்து நான் பொய்யாக வாதம்  செய்துகிறேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி சொத்தை கிரயம் பெற்று அடைந்து அனுபவம்  செய்து வரும் நிலையில் வாதியுடன் நான் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லும் ஒப்பந்தம் 4 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.  நான்  வழக்கிற்காக பொய்யான எதிர்வாதம் தாக்கல் செய்து,  பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 18.06.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS